# சிற்பக்கலை உணர்த்தும் பண்பாடு

*முனைவர் செ. சிவகாமி சுந்தரி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி
தூத்துக்குடி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5009

ஆயகலைகள் அறுபத்து நான்கு என்பது வழக்கு. கற்பனை வளத்தை ஊக்குவிப்பது கலை. எல்லாக் கலைகளும் இறைத்தன்மையின் வெளி ப்பாடு தான் என்றாலும் பக்திக்கும் வழிபாட்டிற்கும் அடையாளமாக விளங்குவது சிற்பக்கலை. ஒருவன் தன் கண்களால் கண்ட கற்பனை உருவங்களை வடிவமைத்துச் செய்வது சிற்பம். சிற்பங்களை உருவாக்குபவர் சிற்பி. மணிமேகலைக்காப்பியம் சிற்பிகளை மண்ணீட்டாளர்கள் என குறிப்பிடுகிறது. ஏனைய கலைகளில் படைப்பவன் தானே தனது படைப்பை அதாவது வேண்டியதை உருவாக்குகிறான். ஆனால் சிற்பி வேண்டாததை நீக்கிறான் ஏனைய கலைகள் ஆக்கத்தில் தோன்றும் போது சிற்பக்கலை மட்டும் நீக்குதலிலும் நீங்குதலிலும் தோன்றுகிறது.

## பண்பாடு

பண்பைக் பக்குவப்படுத்துவது பண்பாடு. பண்பு என்னும் சொல்லின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்"[1] என்கிறது கலித்தொகை. 1951 ஆம் ஆண்டு டி.கே.சிதம்பரநாத முதலியாரால் தமிழுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.[2] சிற்பக்கலை உணர்த்தும் பண்பாடு பற்றிக் காண்போம்.

## சிற்பம் அமைக்கும் பொருள்கள்

**"கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்**
**மண்ணும் சதையும் தந்தமும் வண்ணமும்**
**கண்ட சுடுக்கரையும் மெழுகும் என்றிவை**
**பத்தே சிற்பத் தொழிற்குறுப்பாவன"[3]**

மெழுகு அரக்கு, சுதை, மரம், தந்தம், கல், பஞ்சலோகம் முதலியவைகளினால் சிற்ப உருவங்கள் அமைக்கப்படுகின்றன எனத் திவாகரநிகண்டு கூறுகிறது.

### தொல்காப்பியத்தில் சிற்பக்கலை

சிற்பத்திற்கு படிமை அல்லது பிரதிமை என்னும் பெயர்களும் உள்ளன.[4] பல்புகழ் நிறுத்தப்படிமையோன் எனப் பனம்பாரனார் கல்லில் செதுக்கிய படிமைபோலத் தொல்காப்பியர் தன்பெயரை நிலைநிறுத்திக் கொண்டார் எனக் குறிப்பிடுகிறார்.

**"காட்சி காலகோள் நீர்படை நடுகல்"[5]**

எனத் தொல்காப்பியம் நடுகல் நடும் வழக்கத்தினை நுவலுகின்றது. இறந்த வீரனுக்கு நடுகல் நட்டபின் நாளடைவில் கோவில் எடுப்பது வழக்காமாயிற்று. இறந்த வீரன் தெய்வநிலைக்கு உயர்த்தப்பட்டதனை உணரமுடிகிறது. ஊருக்காக உயிர் கொடுத்த வீரனுக்கு நன்றி செய்யும் பண்பாடு தெரிகிறது.

### சங்ககாலத்தில் சிற்பக்கலை

மண்ணால் செய்து வண்ணம் தீட்டி அமைத்த சிற்பங்கள் சங்ககாலத்தில் இருந்தனர். சங்ககாலத்தில் பாவைவிளக்குச்சிற்பம் அரண்மனை, போர்பாசறை, கோவில்களில் வைக்கப்பட்டிருந்தன. தமிழர்களின் வாழ்க்கை பண்பாட்டோடு கலந்த ஒன்று என்பது இதனால் புலனாகின்றது. சங்க கால சிற்பங்கள் கலைபண்பாட்டினை உலகிற்கு உணர்த்தும் வகையில் அமைந்து ள்ளன. எளிதில் அழிந்து போகக்கூடிய வண்ணங்களைச் சிற்பிகள் பயன்படுத்திய காரணத்தால் சங்ககாலச் சிற்பங்கள் முற்றிலும் மறைந்துவிட்டன. சங்ககாலச் சிற்பங்களிலிருந்து மன்னர்களைப் போரில் பாதுகாத்தல், சங்ககால மக்களின் உணவு உடைப்பண்பாடு அணிகலன் மற்றும் புழங்குபொருட்கள் பற்றிய பண்பாட்டை அறியமுடிகிறது. சங்ககால நடுகற்களில் நேருக்கு நேர் நின்று போர் செய்த வீரன் மார்பில் அம்பு துளைத்து நிற்பது போல் காட்டப்பட்டுள்ளது. நடுகற்கள் வீரனின் வீரப்பண்பாட்டைப் பறை சாற்றும் வண்ணம் உள்ளன.

### பல்லவர்கள் காலச்சிற்பங்கள்

பாறைகளைக் குடைந்து கற்றளிகள் அமைத்தது பல்லவமன்னர்கள் கையாண்ட புதுமைகளில் ஒன்றாகும். மகேந்திரவர்மன் காலந்தொட்டு சிற்பக்கலை படிப்படியாக வளர்ச்சி அடைந்து இருப்பதைப் பல்லவர் கோயில் சிற்பங்களும் மாமல்லபுரத்துத் திறந்த வெளிச்சிற்பங்களும் காட்டுகின்றன.[7] நரசிம்மன் காலத்து சிற்பச் சுவர்களில் புராணக்கதைள், காவியம் சிற்பவடிவில் கண்எதிரே காட்டப்படுகிறது. நோயாளிகளுக்கு மருந்துகொடுத்தல், ஊனமுற்றவர்களுக்கு உணவு கொடுத்தல் போன்ற சிற்பங்கள் காணப்படுகிறது. இதிலிருந்து மனிதநேயப் பண்பாடு உணவு கொடுக்கும் பண்பாடு வெளி ப்படுகிறது.

### கயிலாசநாதர் கோவில் சிற்பங்கள்

காஞ்சி கயிலாசநாதர் கோவில் திருச்சுற்று முழுவதும் வியத்தகு சிற்பங்களைக் கொண்டது.[6] அதனைச் சிற்பக்கலைக்கூடம் என்றே சொல்லலாம். சிவன் எட்டு கைகளுடன் ஆடும் பலவகை நடனங்கள், நடனவகைகளை உணர்த்தும் சிற்பங்கள் காணப்படுகின்றது. இதிலிருந்து பல்லவர்கள் காலத்தில் நடனக் கலையைப் போற்றும் பண்பாடு தெரிகிறது.

### சோழர்கள் காலச்சிற்பக்கலை

பல்லவர்களைப் போன்று சுவர் முழுவதும் சிற்பங்களால் சோழர்கள் நிறைக்கவில்லை. வைணவர்கள் ஆலயங்களில் மூவகைக் கோலத்தில் திருமால் திருஉருவத்தைச் சிற்பிகள் செதுக்கி உள்ளனர். அவை அமைதியும் அருளும் அன்பும் பொலிந்தவாறு காட்டப்பட்டுள்ளன. இந்தச்சிற்பங்கள் ஆன்மா அமைதி பெறும் பண்பாட்டைப் பறைசாற்றும் வண்ணம் உள்ளன.

ஶ்ரீநிவாசநல்லூர் குரக்குநாதர் கோயிலில் சிற்பங்களைக் காணும் பொழுது சிற்பம் என்பதே சிந்தையில் இருந்து சென்றுவிடுகிறது. வெளியே இருந்து வந்திருப்பவர்களை தாம்

நிற்கும் இடத்தில் இருந்து வெளி யே இருந்து வரவேற்பதைப் போல் தத்ரூபமாகத் தோன்றுகிறது. இதிலிருந்து வந்தாரை வரவேற்கும் பண்பாடு புலனாகிறது.

### விஜயநகராத்தார் காலச் சிற்பங்கள்

விஜயநகரவேந்தர் ஆட்சியில் ஆந்திரநாட்டுச் சிற்பக்கலையும், கன்னடநாட்டுச் சிற்பக்கலையும், தமிழ்நாட்டுச் சிற்பக்கலையும் கலப்புண்டன. விஜயநகரக் காலத்திற்கு முந்தைய சிற்பங்களில் பெண்களின் மார்பகங்கள் மறைக்கபட்டிருக்காது. விஜயநகரக் காலத்தில் இருந்ததுதான் புடவை மாதர்களின் மேற்பகுதியை மறைத்துக் காணப்படுவது சிற்பங்களில் காணப்படுகிறது. மூலிகையிலிருந்து சாறு எடுத்து சிற்பங்களுக்கு வண்ணம் தீட்டினர் சிற்பிகளுக்கு தாவரஅறிவும் வண்ணங்களைப்பற்றிய அறிவும் இருந்தது. இதிலிருந்து சிற்பிகளின் தொழில்பண்பாடு பற்றி அறிய முடிகிறது.

அரியநாத முதலியார் கட்டிய ஆயிரங்கால் மண்டபத்தின் தூணில் உள்ள சந்திரமதியின் சிற்பம் இரக்க உணர்வைத் தோற்றுவிக்கிறது. இறந்த மகனைக் கையில் ஏந்தி அவலத்துடன் நிற்கும் சந்திமதியின் துன்பம் காண்போரையும் கலங்கச் செய்கிறது.

நெல்லையப்பர் கோவிலில் இருக்கும் சிற்பத்தில் வயலின் போன்ற தோற்றமுடைய சாரங்கி இசைக்கருவி காணப்படுகிறது. சிவன் நடனமாடிய தலம் என்பதால் நடனச்சிற்பங்கள் ஸ்ருதிக்கான லயவகை கொண்டதாக தூண்கள் உள்ளன. இதிலிருந்து இசைப்பண்பாடு பற்றி அறியமுடிகிறது.

தஞ்சாவூர் பிரகதிஸ்வரர் ஆலயத்தில் உள்ள ஒருசிற்பத்தில் பொம்மையைச் சக்கரத்தில் பொருத்தி சிறுவன் சிறுதேர் உருட்டி நடையிலும் காட்சி சிற்பமாக அடிக்கப்பட்டுள்ளது. விளையாட்டு பொழுதுபோக்கும் ஒரிணத்தின் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிட்ட இடம் பெறுவதை உணர்த்துகிறது.

தஞ்சை பெரிய கோவிலில் உள்ள ஒரு சிற்பத்தில் கண்டராதித்த சோழன் மனைவி செம்பியன்மாதேவி கோயில்களுக்குத் தங்கக்குடமும் வெள்ளிக்கலன்களும் ஏராளமான நிலன்களும் கொடுத்ததைக் காட்டும் சிற்பம் உள்ளது. இதிலிருந்து பகுத்தளிக்கும் ஈகைப்பண்பாட்டினை அறியமுடிகிறது.

### கஜுராகோ கோவில் சிற்பங்கள்

இந்தியச் சிற்பக்கலையின் மிகச்சிறந்த வெளிப்பாடு கஜுராகோ சிற்பங்களில் இருக்கிறது. மனிதவாழ்வில் ஒரு அங்கமாக விளங்கும் பாலியலைத் தவறாகவே புனிதமற்றதாகவோகருத வேண்டியதில்லை என்பதை வலியுறுத்தும் வகையில் பாலியல் சிற்பங்கள் இக்கோவிலில் உள்ளன. மனிதன் கோயிலுக்குச் செல்லும் போது மனதைக் கண்டபடி ஓடவிடாது அடக்க வேண்டும் என்பதற்காக இத்தகு பாலியல் சிற்பங்கள் காதல் கோயில் எனப்படும் கஜுராகோ கோவிலில் இடம்பெற்றுள்ளன். இது ஆன்மா அமைதி பெறும் பண்புநிலையை எடுத்துக் காட்டுகிறது.

இந்திய வரலாற்றில் குப்தர்களின் காலம் சிற்பங்களின் பொற்காலமாகக் கருதப்பட்டது. உள்ளது உள்ளபடியே காட்டுவது அயல் நாட்டுச்சிற்பம் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் காட்டுவது நமது நாட்டுச்சிற்பம். நமது நாட்டுச் சிற்பக்கலை சமயத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்று அயல்நாட்டுச் சிற்பங்களில் சிறந்தவை கிரேக்க நாட்டுச் சிற்பங்கள். மனிதனின் படைப்புகளில் காலத்தால் அழியாமல் வாழக்கூடிய கலைப் படைப்பு சிற்பமாகும். நாகரிகத்தின் புலப்பாடாகவும் பண்பாட்டின் செல்வமாகவும் அழகின் இருப்பிடமாகவும், மனதைக் கவர்வதாகவும் ஆக்கப்படைப்பாக விளங்கும் சிற்பக்கலையைப் போற்றிப் பாதுகாப்பது நம் கடமையாகும்.

## அடிக்குறிப்புகள்

1. முனைவர் அ.விசுவநாதன் (உரை ஆசிரியர்) கலித்தொகை பா.எ.16
2. முனைவர் இரா.ஜெகதீசன் கலித்தொகை ஆய்வுக்கோவை ப.251
3. மயிலை. சீனி.வேங்கடசாமி நுண்கலைகள் ப.17
4. முனைவர் பாக்யமேரி காலம் தோறும் தமிழர் கலைகள் ப.112
5. தொல்காப்பியம் பொருளதிகாரம் நூற்பா எண் 126
6. டாக்டர் கே.கே.பிள்ளை தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் ப.241
7. வே.தி.செல்லம் தமிழக வரலாறும் பண்பாடும் ப.247

## துணைநூற்ப்பட்டியல்


1. முனைவர் அ.விசுவநாதன் (உரை ஆசிரியர்) நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் சென்னை 98.
2. முனைவர் இரா.ஜெகதீசன் கலித்தொகை ஆய்வுக்கோவை விழிச்சுடர் பதிப்பகம் சென்னை 99 முதற்பதிப்பு 19.12.2009.
3. மயிலை. சீனி. வேங்கடசாமி நுண்கலைகள் நாம் தமிழர் பதிப்பகம், திருவல்லிக்கேணி சென்னை 5. 3 ஆம் பதிப்பு 2014
4. முனைவர் பாக்யமேரி காலம் தோறும் தமிழர் கலைகள், அறிவுப்பதிப்பகம் சென்னை 4 முதற்பதிப்பு மே 2010
5. இளம்பூரணர் தொல்காப்பியம் சாரதா பதிப்பகம் சென்னை 14 முதற்பதிப்பு மே 2005.
6. டாக்டர் இராசமாணிக்கனார் தமிழக்கலைகள் புலவர்பதிப்பகம் சென்னை 88 முதற்பதிப்பு டிசம்பர் 2009.
7. டாக்டர் கே.கே.பிள்ளை தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தரமணி சென்னை 13.
8. வே.தி.செல்லம் தமிழகவரலாறும் பண்பாடும் மணிவாசகர் பதிப்பகம் சென்னை 8 முதற்பதிப்பு ஜனவரி 2014.